1972 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) 1971 நவம்பர் திங்களி லிருந்து சர்க்கரை விலையில் உயர்வு காணப்பட்டதால், மாநில அரசு, மத்திய அரசை, சர்க்கரையின் சில்லறை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 2-க்கு மேற்படாமல் வரையறுக்குமாறு கேட்டுக்கொண்டதுடன், பொதுமக்களுக்குக் கட்டுபடியாகும் விலையில் சர்க்கரை வழங்குவதற்காக மாநிலத்தின் சர்க்கரைத் தேவைகளை நிறைவு செய்ய, மாநில அரசிற்கு 50 சத வீதம் சர்க்கரை கிடைக்கச் செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டது.

Waste lands

* 97 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the extent of total cultivable waste lands in Tamil Nadu, district-war?

THE HON. THIRU P. U. SHANMUGAM : A statement @ is placed on the Table of the House.

உப்பளங்கள்.

* 98 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உப்பளங்கள் தற்போது எங்கெங்கு இயங்கி வருகின்றன ?

(இ) அவற்றினை நவீன முறையில் செயல்படுத்த அரசு மேற்கொண்டு வரும் நடவக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாட்டில் செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் கடற்கரைப் பகுதிகளில் உப்பளங்கள் இயங்கி வருகின்றன.

(இ) தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட உப்பு மற்றும் இரசாயனத் தொழில் வாரியம் நவீன முறையில் உப்பு உற்பத்திக்கான வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு அதன் பரிந்துரைகளை அவ்வப்போது வழங்கும்.

திரு. என் கிட்டப்பா : மாயூரம் தாலுக்காவிலுள்ள தரங்கம்பாடி கடற்கரையில் ஒரு உப்பளத்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

@ 653 -ம் பக்கத்தில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.